[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மார்ச் 31

கூட, அது 15.50ஆக இருந்தாலும் சரி, 15.95 ஆக இருந்தாலும் சரி, குறைந்த ஊதியம். அந்த ஊதியத்தைக் கூட்டித் தர வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், இந்தத் துறையின் மூலமாக நிச்சயமாக செய்ய முடியாது என்ற ஒரு முடிவிற்கு வந்திருக்கின்ற காரணத்தினாலே, அந்தத் துறையிலே இருக்கக்கூடிய மரம் தயாரிக்க முடியாத பகுதிகள் ஏறத்தாழ 3,000 ஹெக்டேரை வனத்துறைக்கு திருப்பிக் கொடுத்து விட்டு, மீதமுள்ள ஏறத்தாழ 3,000 ஹெக்டேரில் தேயிலை உற்பத்தி செய்து, தேயிலைச் செடிகளை வளர்த்து, இன்னும் பல தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி அதன் மூலமாக அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரமுடியும் என்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க நம்முடைய முதல்வர் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் ஆணை பிறப்பிக்கப்பட இருக்கின்றது. ''டான்டீ'' என்று சொல்லப்படுகின்ற அந்தத் தேயிலை நிறுவனம், தமிழ்நாடு வனத்துறையிலே இயங்குகின்ற அந்த நிறுவனம், அந்த 3,000 ஹெக்டேர் நிலத்தை எடுத்துக்கொண்டு தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்து தேயிலைத் தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கி, நிச்சயமாக அந்த ஊழியர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தித் தந்திட முடியும். வாழ்க்கை முறையை நாங்கள் உயர்த்தித் தந்திட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இந்த சின்கோனா துறையில் பணியாற்றக்கூடிய 3 ஆயிரம், 4 ஆயிரம் தொழிலாளர்கள் நிச்சயமாக இந்த மாற்றுத் திட்டத்தின் மூலமாக பயன்பெறுவார்கள். உடனடியாக 22 ரூபாய் இல்லாவிட்டாலும் 20 ரூபாய் அளவுக்காவது அவர்களுடைய ஊதியம் உயர்த்தித் தரப்படும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொண்டு இந்த அளவோடு வனத்துறையைப்பற்றி இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு என்னுடைய பதிலாக தெரிவித்து கொண்டு இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை நீக்கிக் கொண்டு நாங்கள் கோரியிருக்கின்ற தொகைக்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

14–15 மணி.

10. டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ''பாரத ரத்னா'' விருது வழங்கப் பெற்றுள்ள செய்தி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் ஒரு இனிய அறிவிப்பை இன்றைக்குச் செய்துள்ளார்கள். நாட்டின் மிக உயர்ந்த விருதான ''பாரத

ரத்னா '' என்ற விருதினை நீண்ட காலத்திற்குப் பிறகு மறைந்த மாமேதை, அரசியல் சட்டத்தினுடைய தந்தை அம்பேத்கார் அவர்களுக்கு வழங்கப்படும் என இன்றைக்கு அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மாத்திரம் அல்லாமல் இந்திய திருநாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களும் மகிழக்கூடிய ஒரு அருமையான அறிவிப்பு என்ற வகையில் இந்த மாமன்றத்தின் சார்பாக பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

9. மானியக் கோரிக்கைகள், 1990-91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த சின்கோனா துறையில் 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் இருந்தவர்கள் குறைந்து, குறைந்து இன்றைக்கு 1,600 பேர் தான் இருக்கிறார் கள். இப்போது அந்தத் துறையில் இலாபம் இல்லை என்பது தொடர்ந்து சொல்லக்கூடிய விஷயம் தான். அவர்களுக்கு ரூ. 16.95 காசு தான்—22 ரூபாய்க்குக் கூலி வேலை செய்யக் கூடிய அதே இடத்தில் இருக்கிற தேயிலைத் தோட்ட தொழி லாளர்கள் மாதிரி அவர்கள் இல்லை இன்றைக்கு. அவர்கள் அனேகமாக தாழ்த்தப்பட்டவர்கள். அரசு இதை தேயிலைத் தோட்டமாக மாற்றி அவர்களுக்கு வேலை கொடுப்பதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஏன் என்றால் இந்தத் துறை இல்லா விட்டால் அவர்களுக்கு அந்தத் துறையில் வேலை இருக்கவேண் டும். ஆனால், ஒருவன் கூட துறை மாற்றப்பட்டு அந்தத் தொழிலை நாம் கைவிடுகிறோம் என்பதால் அவர்கள் வேலை இல்லாமல் போகக் கூடாது என்ற உத்திரவாதத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம், கோவையில் ஒவ்வொரு வருடமும் பொருட்காட்சி நடத்தி ஏராளமான பணத்தை நாம் அங்கே கோவை மக்களால் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முன்னால் இருந்த அரசு பொருட்காட்சி நடத்தக்கூடிய இந்த சுற்றுலாத் துறைக்குத் தலைவராக இருந்த அமைச்சர் அவர்கள் 2 முறை அங்கே பகிரங்கமாக கூட்டத்தில் நானே இருந்தேன் அவர் அங்கே ஒரு கலை அரங்கத்தை அந்த ஜெயில் வளாகத்தில் கட்டுவதற்கு உறுதி அளித்து அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து இன்று வரைக்கும் அது நடைபெறவில்லை. அதை நிறைவேற்றுவதற்கான அந்த வாக் குறுதியை நமது அமைச்சர் அவர்கள் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.